123

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



கூவம் என வழங்கும்

# திருவிற்கோலத் தலபுராணச் சுருக்கம்

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை,

சென்னை.

1929

விலை 3 பை.

Q23'38.2J2K.
M29
142037

704
290.535
5 APR 1929
MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கூவம் என வழங்கும்

# திருவிற்கோலத் தலபுராணச் சுருக்கம்

" மூர்த்திதலம் தீர்த்தம் எனமுறையாய்த்
தொடங்கினற்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே "

## க. தலம்—இருக்கும் இடம்.

அகில புவன கர்த்தாவாய் சர்வஜீவ தயாபரராய் எங்கும் நிறைந்த சிவபரம்பொருள் தம்மை மெய்யன்பர் வழிப்பட்டு உய்யும் பொருட்டு, சகள உருவம் தாங்கி, சிவலிங்கமூர்த்தமாய் புண்ணிய பூமியாகிய நம் தேசத்தில் 1008 சிவஸ்தலங்களில் வீற்றிருந்து அருள்புரிவதாக ஆன்றோர் கூறுவர். அவைகளில் கடலால் கொள்ளப்பட்டும் மண்ணால் மூடப்பட்டும் வேறு பல காரணங்களால் மறைந்தும் உள்ளவை போக இப்போது தேவாரப் பதிகங்களை யுடையனவாய் இருக்கும் ஸ்தலங்கள் இருநூற்று எழுபத்து நான்கு. இவற்றுள் தொண்டை நாட்டில் உள்ளன முப்பத்திரண்டு. அவற்றுள் கூவநதிக் கரையில் உள்ளது கூவம் என வழங்கும் திருவிற்கோலம் என்ற தலம். சென்னையிலிருந்து அரக்கோணம் செல்லும் பெரிய இருப்புப்பாதையில் 30-வது மைலில் உள்ள

கடம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து மோட்டார் போகக் கூடிய க[illegible]ழியாய் தெற்கே 6 மைல் சென்றால் இந்த ஸ்தலத்தை யடையலாம். இதற்கு அருகே திருஇலம்பையங்கோட்டூர், திருவூறல் (தக்கோலம்) திருவாலங்காடு என்ற ஸ்தலங்கள் இருக்கின்றன.

## உ. தலமகிமை.

பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் தாருகாசூரன் என்று ஒருவன் இருந்தான். அவன் உயிர்களை அதிகமாகத் துன்பப் படுத்தினான். நல்லொழுக்கம், சிவபூஜை, ஆலயவழிபாடு முதலியவைகட்கு அதிக இடையூறு அவனால் உண்டாயிற்று. முருகக் கடவுள் அவனை சம்ஹாரம் செய்து அருளினார். பிறகு அவன் பிள்ளைகளாகிய வித்துன்மாலி, தாருகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவர் கொடிய தவமிருந்து அதன் பலனாக அதிக பராக்கிரமத்தைப் பெற்று தேவர்கள், முனிவர்கள் மற்றும் உயிர்கள் ஆகிய சகலரையும் அளவில்லாத துன்பத்திற்கு உள்ளாக்கினார்கள். இவர்களுக்குத் திரிபுராதிகள் என்று பெயர். எல்லா உயிர்களும் சிவபெருமானிடத்து முறையிட்டு, திரிபுராதிகளை ஒழிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டன. சிவபெருமான் அதற்கு இரங்கித் தாமேசென்று திரிபுராதிகளை எரிப்பதாக அருள் செய்தார். சகல தேவர்களையும் ஒவ்வொரு ப்குதியாகக் கொண்ட அரியதொரு தேரின்மேல் எறிக்கொண்டு சிவபெருமான் இத்தலத்தின் அருகே வரும்பொழுது திடீரென்று தேரின் கூவிரமாகிய ஏர்க்கால் ஒடிந்தது. சகல தேவர்களும் பயந்து நின்றார்கள். அப்போது சிவபெருமான் மேருமலையை வில்லாகக் கையில் பிடித்த திருவிற்கோலமாய் (திரு+வில்+கோலம்) நின்று தேவர்களைப் பார்த்து "எந்த வேலையிலும் இடையூறு வராமல் காக்கின்ற கணபதியை வணங்காமல் நீங்கள் புறப்பட்டதனால் இந்த இடையூறு உண்டாயிற்று" என்று எடுத்

தாக் கூறினார். தேவர்கள் இதை யுணர்ந்து விநாயகக் கடவுள் திருவிளையாட்டை அதிசயித்து அவரை வணங்கி நின்றார்கள். பிறகு இத்தலத்திலுள்ள திவ்ய தீர்த்தத்தில் மூழ்கித் தீண்டாத் திருமேனியாய் விளங்கும் சிவலிங்கப்பெருமானை வணங்கினார்கள். ஆகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகைச் சிறப்பும் இந்த க்ஷேத்திரத்தில் பொருந்தியுள்ளன. இந்தத் தலத்திலுள்ள தீர்த்தத்தில் மூழ்கி, சிவபெருமானை வழிப்பட்டால் எல்லாத் துன்பங்களும் நீங்கி எல்லா உயிர்களுக்கும் ஞான சாதனமும் பேரின்பமும் கைகூடும். பிரமனும் திருமாலும் முடி அடிதேடிக் காணாது இறுதியில் சிவபெருமான் திருவருளால் சிவன் உருவத்தைக் கண்டு பிறகு இத்தலத்தில் சிவலிங்க வழிபாடு செய்து அருள் பெற்றனர்.

இத்தலத்தில் சிவனடியார்க்கு அன்னதானம் செய்யும் அரிய தொண்டு தவறாமல் நடத்தும் தர்மசீலர் என்ற ஒருவர் இருந்தார். பல ஆண்டுகள் கழிந்த பின்னர் வறுமை வந்தகாலத்தும் அவர் பல இடங்கள் சென்று இரந்து இத்திருப்பணியைத் தவறாமல் நடத்தி வந்தார். எட்டுநாள் இடைவிடாமல் தாமும் தம் மனைவியாரும் பட்டினி கிடக்க நேர்ந்தது. அப்போது ஓர் அடியார் பசியோடு வந்து அன்னம் வேண்டினார். உடனே தர்மசீலர் ஊரில் சென்று இரண்டு நாழி செந்நெல் இரந்து கொண்டுவந்து சமைத்து அடியவர்க்கு அமுது படைத்து மிஞ்சியதைத் தாம் உண்ணத் தொடங்கினார். அப்போது சிவபெருமான் ஒரு கிழ அடியார் வேடம் பூண்டு பசியென்று கூக்குரல் இட்டு ஓடிவந்தார். தர்மசீலர் தாம் எட்டுநாள் பட்டினி இருந்ததையும் பொருட்படுத்தாது வந்தவர்க்கு அன்னம் படைத்தார். வந்த அடியவர் உடனே மறைந்து “அன்பனே உன்னுடைய அரியதொண்டுக்கு மெச்சினேன். நமது கோயிலில் தினமும் ஒரு குடம் நெல் தருவோம். அதைக் கொண்டு உன் விர

தத்தை நடத்துக" என்று அருளினர். ஆதலால் "செங்நெல் வைத்தவன்" என்று இத்தலத்துச் சுவாமிக்கு ஒரு பெயர் உண்டு.

திருவாலங்காட்டிலே, காளி தாண்டவம் செய்து சிவனையும் தாண்டவத்தில் வாதுக்கு அழைத்தனள். சிவபெருமான் ஊர்த்துவதாண்டவம் (காலை மேலே தூக்கி ஆடுதல்) செய்து காளியை வெட்கம் அடையும் படிச் செய்தார். காளி தோற்றுப்போனவுடன் சிவபெருமான் அவளைப் பார்த்து "நாம் கூவம் என்ற திருவிற்கோலத்தில் இரக்ஷாநடனம் செய்கிறோம். ஆங்குச் சென்று தரிசித்து அவ்வூருக்குப் பீடை ஒன்றும் வாராது காப்பாயாக. என்னோடு தர்க்கம்செய்து தாண்டவம் செய்ததனுல் தர்க்க மாதா என்றும், பீடை வாராமல் தலத்தைக் காப்பதனுல் பீடாரி என்றும் பெயர் பெறுவாய்" என்று அருள் செய்தார்.

இத்தலத்துச் சுவாமியார் திருபுராந்தகேஸ்வரர், தேவியார் திரிபுராந்தகியம்மை. சிவலிங்க மூர்த்தம் சுயம்பு; பூஜைசெய்யும் குருக்கள் உள்பட எவரும் தீண்டாத் திருமேனி. அத்திருமேனியில் அதிக மழை பெய்கிறதாக இருந்தால் வெள்ளை வர்ணமும், யுத்தம் நேரிடுவதானுல் சிவப்பு வர்ணமும் படருகிற அதிசயமுடையது இத்தலம். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் தேவாரத்தில் "ஐயன் நல் அதிசயன்" என்று இத்தல மூர்த்தியைச் சிறப்பித்துக் கூறுகிறுர்.

### ௩. தலத்தின் தத்துவம்.

காணப்பட்ட இவ்வுலகத்தினுள்ளே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் எள்ளுக்குள் எண்ணெய் போலவும் விறகினுள் தீயைப் போலவும் ஊடுருவி நிற்கிறுர். இதை "விறகில் தீயினன் பாலில் படுநெய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கால் உணர்க.

இங்கிலீஷ் தத்துவ நிபுணர்களும் இதை ஒத்துக் கொண்டு இக்கொள்கைக்கு (The Doctrine of Immanence) இம்மனன்ஸ் கொள்கை என்று பெயரிட்டு இருக்கிறார்கள். இத்தகைய கடவுளை அறிவதற்கு அப்பர் சுவாமிகளே ஓர் உபாயம் சொல்லுகிறார். அதாவது "உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக்கடைய முன்னிற்குமே" என்றார். உலகத்தை அறிவினால் அறிந்து கொண்டால் அதோடு உறவு கூடலாம். பொதுவாக உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் ஐந்து பிரிவுகளாக்கலாம். அவைகளை நிலம், நீர், தீ, வளி (காற்று), வான் (வெளி) ஆகிய பஞ்சபூதங்கள் என்று கூறுவது வழக்கம். இவற்றை விளக்குவதற்குத் தமிழ் நாட்டில் ஐந்து தலங்கள் உள்ளன, காஞ்சீபுரம், ஜம்புகேஸ்வரம், திருவண்ணாமலை, காளஹஸ்தி, சிதம்பரம். தொண்டை நாட்டுக்குள்ளேயே பஞ்சபூத ஸ்தலங்களாக காஞ்சீபுரம், தக்கோலம், கூவம், காளத்தி, திருவாலங்காடு ஆகிய இவ்வைந்தையும் கூறுவதுண்டு. திருவிற்கோலம் என்ற கூவம் அக்கினித்தலமாக விளங்குகிறது.

அறிவுள்ள மனிதர்களுக்குச் சிற்சில பொருள்களைப் பார்க்கும்போது சில வகையாக உள்ளம் நெகிழ்கின்றது. துன்பப்படும் பிராணியைப் பார்க்கும்போது இரக்க நெகிழ்ச்சியும், அழகுள்ள பெண்ணைப்பார்க்கும்போது காம நெகிழ்ச்சியும், கடற்கரையில் சூரிய உதயத்தைப் பார்க்கும்போது இன்ப நெகிழ்ச்சியும் இயற்கையாகவே உண்டாகின்றன. அதுபோலவே ஒவ்வொருவருக்கும் தமது அறிவு அநுபவத்துக் கேற்ற அளவில் கோயில், சிவலிங்கம் முதலியவற்றைக் கண்டால் பேரின்ப நெகிழ்ச்சியுண்டாகிறது: பசுவின் உடம்பு முழுவதும் இரத்தம் ஓடியபோதிலும் அதே யிரத்தம் பாலாக மாறி அப்பசுவின் மடிக்காம்புகள் வழியாகத் தான் வரும். கொம்பு, காது, வால், கால் முதலிய இடங்களில் இரத்தம் வருமே யொழிய பால் வராது. அது

போலவே உலகமுழுவதும் கடவுள் இருந்தபோதிலும் நமக்கு வேண்டிய இன்பத்தை யூட்டுவதற்கு அவர் கோவில்களிலும் சிவலிங்கத்திலும் இருக்கிறார். இதை யுணராமல் கடவுள் இல்லை, கோவில் வேண்டாம், திருநீறு பூசமாட்டோம் என்று பிதற்றும் மூடர்களுக்கு அறிவும் அனுபவமும் எள்ளளவும் இல்லையென்று கூறவும் வேண்டுமோ?

ஆலயந் தொழுவதினாலும் சிவபூஜை செய்வதினாலும் நாளுக்கு நாள் அன்பும் அறிவும் அதிகமாகும். எல்லா வுயிர்களையும் தன்னுயிரைப்போல் பார்க்கும் மனம் உண்டாகும். எல்லாப் பொருள்களையும் இது வேண்டும் அது வேண்டாம் என்ற உணர்ச்சி யில்லாமல் வித்தியாச மின்றி ஒன்றாகப் பார்க்கும் உள்ளம் தோன்றும். நான் பெரியவன், செல்வன், அறிவாளி என்ற அகங்காரம் போகும். நம்முடைய உள்ளப் பரிபக்குவத்தால் அறிவும் அனுபவமும் அன்பும் முதிர்ந்துவிடும். வெளியே நடக்கும் ஒவ்வொரு செய்தியும் நமக்கு சோதனையாகவும் அறிவூட்டுவதாகவும் தோன்றும். ஆகவே மூர்த்தி தலம் தீர்த்தமென முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தைசொல சற்குருவும் வாய்க்கும் என்ற உண்மை நமக்கு நன்றாக விளங்குவதாயிற்று.

சிவபெருமான் திரிபுராதிகளை எரித்த சரித்திரத்தின் தத்துவார்த்தத்தைத் திருமூலர் திருமந்திரத்தில்,

“ அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே”

என்னும் பாட்டால் விளக்குகிறார். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் சேஷ்டையே திரிபுராதிகளைக் கொடிய அக்கிரமங்கள் செய்யும்படி ஆட்டிவைத்தது. அம்மலச் சேஷ்டையால் நல்ல காரியங்கள்

கடக்கவேயில்லை. துன்பமே அதிகரித்தது. கடவுள் கிருபை கூர்ந்து மும்மலங்களையும் எரித்த பிறகு உலகத்துக்கு க்ஷேமம் உண்டாயிற்று. ஆகவே மும்மலங்களையும் ஒழித்த விடத்தில்தான் கடவுள் திருவருள் நிலைத்திருக்கும் என்று அறியவேண்டும்.

---

## திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

### ௩-ந் திருமுறை

### திருவிற்கோலம் - பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவி வானவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடம் திருவிற் கோலமே. (க)

சிற்றிடையுமை ஒரு பங்கன் அங்கையில்
உற்றதோர் எரியினன் ஒரு சரத்தினால்
வெற்றிகொள் அவுணர்கள் புரங்கள் வெந்துஅறச்
செற்றவன் உறைவிடம் திருவிற் கோலமே. (உ)

ஐயன் நல்லதிசயன் அயன்விண்ணோர்தொழும்
மையணி கண்டனார் வண்ணம் வண்ணவான்
பையர வல்குலாள் பாக மாகவும்
செய்யவன் உறைவிடம் திருவிற் கோலமே. (௩)

விதைத்தவன் முனிவருக்கு அறம்முன் காலனை
உதைத்தவன் உயிர்இழக்க உருண்டு வீழ்தரப்
புதைத்தவன் நெடுநகர் புரங்கள் மூன்றையும்
சிதைத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே. (ச)

முந்தினான் மூவருள் முதல்வன் ஆயினான்
கொந்துலாம் மலர்ப்பொழில் கூகமேவினான்
அந்திவான் பிறையினான் அடியார் மேல்வினை
சிந்துவான் உறைவிடம் திருவிற்கோலமே. (ரு)

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழில் கூகமேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே. (௬)

விரித்தவன் அருமறை விரிசடை வெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசற
எரித்தவன் இலங்கையர் கோன் இடர்ப்படச்
சிரித்தவன் உறைவிடம் திருவிற் கோலமே. (௭-௮)

திரிதரு புரம் எரிசெய்த சேவகன்
வரிஅரவொடு மதிசடையில் வைத்தவன்
அரியொடு பிரமனது ஆற்றலால் உருத்
தெரியலன் உறைவிடம் திருவிற் கோலமே. (௯)


சீர்மையில் சமணொடு சீவரக் கையர்
நீர்மையில் உரைகள் கொள்ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையினான் இடம் திருவிற் கோலமே. (௧௦)

கோடல் வெண் பிறையனைக் கூகமேவிய
சேடன் செழுமதில் திருவிற் கோலத்தை
நாடவல்ல தமிழ் ஞான சம்பந்தன்
பாடல்வல் லார்களுக்கு இல்லை பாவமே. (௧௧)

---

இத்தல புராணச்சுருக்கம் பழைய பிரதி யொன்றைத் தழுவி திருவிற்கோலத்துச் சைவ வேளாள மாணவர்கள் சிலரின் விருப்பத்தின்படி எழுதப்பட்டது.

சாது அச்சுக்கூடம், சென்னை.



## இந்நூல்

## அச்சிடுதற்குப் பொருளுதவியவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ம-௱-௱-ஸ்ரீ ம. கி. கோவிந்தராகவ முதலியார் | ரூ. | 4 | 0 | 0 |
| ,, ம. சரவண முதலியார் | | 1 | 0 | 0 |
| ,, மு. பொன்னுசாமி முதலியார் | | 1 | 0 | 0 |
| ,, வே. இரத்தின முதலியார் | | 1 | 0 | 0 |
| ,, ர. தர்மலிங்கம் | | 1 | 0 | 0 |
| ,, கொ. பொ. துரைசாமி | | 1 | 0 | 0 |
| ,, சி. நடேச முதலியார் | | 0 | 8 | 0 |
| ,, S. நடேச முதலியார் | | 0 | 8 | 0 |
| ,, தி. திருநாவுக்கரசு | | 0 | 8 | 0 |

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.

---


## சித்தாந்தம்

ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை

சந்தா விவரம்

(ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுட்பட)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு (இந்தியா, பர்மா, சிலோன்) | ரூ. | 1 | 8 | 0 |
| வெளி நாடு ... ... | ,, | 2 | 0 | 0 |

குறிப்பு:—ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.

"சித்தாந்தம்" ஆபீஸ்,

88, திருப்பள்ளி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.